1970 ஆகஸ்ட் 26]

Municipal Superior Employees Association, Tiruvannamalai.

* 54 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government has received a copy of resolution dated 12-9-1969 from the நகரமன்ற உயர்தர ஊழியர் சங்கம் Tiruvannamalai passed at a conference held on 8th September 1969 at Tiruvanuamalai; and

(b) if so. the details thereof and the action taken thereon?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், நகராட்சி மன்றத்தில் போதுமான நிதி வசதி இருந்தால்தான் கொடுக்கலாம் என்ற அளவுக்கு ஒரு உத்தரவு போய் இருப்பதாக தெரிகிறது. நிதி நிலைமை இல்லை என்று சொல்கிற நேரத்தில் சிலருக்குக் கிடைக்கும் சிலருக்குக் கிடைக்காது என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, இருந்தாலும் இல்லை என்று சொன்னாலும் கொடுக்கப்படக் கூடிய அளவுக்கு உத்தரவு அனுப்பப்படுமா? அதே நேரத்தில் சுகாதாரத் தொழிலாளர்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்று பொது மக்களின் நலனைக் கருதி வேலை செய்யக்கூடிய அந்த சுகாதாரத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும்படி உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நிதி நிலைமை சரியாக இருந்தால் தரப்படவேண்டுமென்று சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படி நிதி நிலைமைத் தட்டுப்பாடு இருக்கிற நேரத்தில் சம்பந்தப் பட்ட நகராட்சி மன்றம் அரசாங்கத்திற்கு எழுதும் போது கடனாக அரசாங்கம் நிதி தருகிறது. சுகாதாரத் தொழிலாளர்கள் பிரச்சினைகளுக்கும் இதற்கும் தொடர்பில்லை.

கொத்தவால் சந்தை இடமாற்றம்

* 55 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள கொத்தவாசல்சாவடியைக் கோடம்பாக்கம்புதூர் Part II-ல் உள்ள அசோக் நகருக்கு மாற்ற அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மா. முத்துச்சாமி: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE: Sir, Kothwal Bazaar Market is now in a very bad shape and there is no proper hygiene and sanitation there on account of the heavy traffic on the busy roads surround-

---

[a] 93-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

ing that market. Is it not a fact that some years ago there was a proposal to transfer this market to a more spacious area with all modern methods of hygiene and convenience? Even if this Government do not have such a proposal now, will this Government at least take stock of the situation and see that something is done immediately to solve this vexatious problem?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: கொத்தவால் சாவடிப் பகுதியில் நெருக்கடி இருக்கிறது என்பதை அரசாங்கம் உணருகிறது. என்ருலும் அது எந்தெந்த வகையில் தீர்க்கப் படும் என்பதற்கு, அங்கே சுகாதார வசதிகள் மற்றவைகள் செய்வதற்கு மாநகராட்சி முடிந்த அளவு செய்து வருகிறது. மற்ற விவரங்கள் தற்போது குறிப்புகளில் எதுவும் இல்லே. ஆகவே, தனியாக இதுபற்றிக் கேள்வி போடவும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: கொத்தவால்சாவடி இப்போது இருக்கும் இடத்தில் இருப்பது நல்லது. பல இடங்களிலிருந்தும் வருவதற்கு அருகில் பஸ் ஸ்டாண்டு வசதி இருக்கிறது. சுகாதாரத்தை மட்டும்தான் கவனிக்க வேண்டும். இடத்தை மாற்றக்கூடாது.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஏற்கெனவே குறிப்பிட்டது போல் பதில் இல்லே.

திரு. கே. விஞயகம்: முன்பு ஒரு முறை இந்த மார்க்கெட்டுகள் சீரமைப்புக் கமிட்டி என்று சொல்லி திரு. வி. வி. ராமசாமி, எம்.பி. இந்த மார்க்கெட்டுகளேப் பார்த்த பிறகு கொத்தவால் சாவடி மார்க் கெட்டை பேசின் பிரிட்ஜ் அருகாமையில் இருக்கும் இடத்திற்கு மாற்ற சிபார்சு செய்தது. அதை, அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. இதை அமுல் படுத்துவதற்கு இப்போது ஏன் தாமதம்? இதனுல் என்ன செலவாகும் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஏற்கெனவே, திரு. ஹாண்டே அவர்களுக்குக் கூறியது போல், இது பற்றிய விவரங்கள் எதுவும் இல்லாததால் விளக்கம் சொல்ல முடியவில்லே.

வங்கிகள் மூலம் வீடுகள் கட்டுதல்

*56 விஞ—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வங்கிகள் மூலம் வீடு கட்டித் தரும் செயற்குறிப்பு அரசு பரிசீலனேயில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: (அ) இல்லே.

(இ) விஞவிற்கு இடம் இல்லே.